## தலைப்பு 102 – நிதி அமைச்சு

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

நிதி அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 16 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 28 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன்

அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திட்டமிடப்பட்ட பிரகாரம் உரிய பணிகளை நிறைவேற்றுவதற்காக 2021 ஆம் ஆண்டின் போது அமைச்சினால் கூட்டுமொத்தமாக ரூபா 2,881 மில்லியன் கட்டுநிதி திறைசேரியிலிருந்து கோரப்பட்டிருந்த போதிலும் திறைசேரியால் கூட்டுமொத்தமாக ரூபா 2,416 மில்லியன் கட்டுநிதி மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கோரப்பட்ட கட்டுநிதியில் ரூபா 465 மில்லியன் குறைவாக கிடைத்திருந்தது. | செலவின தேவைகள் எழுந்திருந்த போதும் கட்டுநிதி வழங்குவதில் உள்ள பிரச்சினையான நிலைமையின் அடிப்படையில் கோரப்பட்ட கட்டுநிதியை விட குறைவான கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் கட்டுநிதியினை பெற்று உரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 32 செலவின விடயங்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 57,190,000 தொகையான தேறிய நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அந்த நிதியேற்பாடுகளில் எதுவும் பயன்படுத்தப்படாதிருந்த மையால் மொத்த நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக திட்டமிடப்பட்ட பிரகாரம் பணிகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தமை நிதியேற்பாட்டின் சேமிப்புக்கு காரணமாகும். | நிதியேற்பாட்டை உச்ச அளவில் செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 67 செலவின விடயங்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 1,988,505,300 மிகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் கூட்டுமொத்தமாக ரூபா 859,389,689 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 1,129,115,611 நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு ஒவ்வொரு செலவின விடயங்களுக்காகவும் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் 11 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக வெளிநாடுகளில் நடாத்தப்பட்ட செயலமர்வுகளுக்காக உத்தியோகத்தர்கள் பங்குபற்றுவதற்கு முடியாதிருந்தமை, மதிப்பீடு செய்யப்பட்ட செலவினங்கள் சமர்ப்பிக்கப்படாமை மற்றும் அமைச்சு பதவியணியனர் நியமிக்கப்படாமையின் காரணமாக செலவின தேவைகள் எழாதிருந்தமை போன்ற காரணங்களின் அடிப்படையில் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | நிதியேற்பாட்டை உச்சஅளவில் செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 முற்பணம் வழங்குதலும் தீர்த்து வைத்தலும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 05 வருடங்களுக்கும் 17 வருடங்களுக்கும் இடையிலான காலம் முதல் சேவையை கைவிட்டுச் சென்ற 05 உத்தியோகத்தர் களிடமிருந்து நிலுவையாக இருந்த கூட்டுமொத்தமான ரூபா 556,141 கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு தவறியிருந்தது. | இரண்டு உத்தியோகத்தர்களின் கடன் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ள போதிலும் உத்தியோகத்தர்கள் இரண்டு பேரினதும் கடன் பணத்தை பிணையாளர்களுக்கு கடன் பணத்தை தீர்க்குமாறு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் ஒரு உத்தியோகத்தரின் கடன் மீதியை பதிவழிப்பதற்கு அரச நிதி பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் கிடைத்திருந்தமையால் 2022 ஆம் ஆண்டின் போது அந்த கடன் மீதியை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைக் கடன் மீதி தொடர்பாக கண்டறிந்து தாமதமின்றி தேவையான மிகுதி நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி பிரிவிற்கு நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 4,145,643 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த கடன் மீதியை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது. | இந்த கடன் மீதி முன்னாள் காணப்பட்ட பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி பிரிவில் காணப்பட்ட முற்பணக் கணக்கிற்கு உரியதாக இருந்ததுடன் எதிர்காலத்தின் போது இந்தக் கடன் மீதியை அறவிட வேண்டிய நபர்கள் சேவையாற்றுகின்ற நிலையங்களை இனங்கண்டு அறவிடுவதற்கோ அல்லது அறவிட முடியாதிருக்குமாயின் கடன் மீதியை நிதிப்பிரமாணம் 113(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கடன் மீதி பதிவழிக்கப்படும். | நிலுவையாக இருந்த கடன் மீதி தொடர்பாக தாமதமின்றி தேவையான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | பணம் மற்றும் மூலதன சந்தைகள் மற்றும் பொது முயற்சிகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சில் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தரிடம் 03 மாத காலத்தை விஞ்சிய ரூபா 170,563 கடன் மீதி காணப்பட்டது. அந்த கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது. | பணம் மற்றும் மூலதன சந்தைகள் மற்றும் பொது முயற்சிகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு கலைக்கப்பட்டதன் பின்னர் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி நிதி அமைச்சின் செலவினத் தலைப்பிற்கு கையளிக்கப்பட்டதுடன் அந்த கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவையாகவுள்ள கடன் மீதியை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி அமைச்சின் கீழ் உள்நாட்டு நிதியம், வெளிநாட்டுக் கடன் மற்றும் உதவிகளை பயன்படுத்தி அமுல்படுத்தப்படுகின்ற சமூக பாதுகாப்பு வலையமைப்பு செயற்திட்டம் (SSNP) இற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 8 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே நிதிப் பிரிவை நவீனமயப்படுத்தும் செயற்திட்டம் (FSMP) இற்காக | 2021 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக திட்டமிடப்பட்ட பிரகாரம் உரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தமை மற்றும் எதிர்பார்த்த பிரகாரம் செலவனங்கள் சமர்ப்பிக்கப்படாமையின் அடிப்படையில் நிதியேற்பாடு | செயற்திட்ட நோக்கங்களை நிறைவேற்று வதற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு செயற்திறனாக பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கூட்டுமொத்தமாக ரூபா 489 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டங்களின் செயலாற்றல் மெதுவான போக்கில் காணப்பட்டதன் காரணமாக சமூக பாதுகாப்பு வலையமைப்பு செயற்திட்டத்திற்காக (SSNP) ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளில் 65 சதவீதம் அதாவது 5.2 மில்லியன் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. நிதிப் பிரிவினை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்திற்காக (FSMP) ஒதுக்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 489 மில்லியன் நிதியேற்பாடுகளில் அந்த செயற்திட்டத்திற்காக எந்தவொன்றும் பயன்படுத்தப்படாமல் ரூபா 313 மில்லியன் நிதியேற்பாடு ஏனைய செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | சேமிக்கப்படுவதற்கு காரணமாகும். அதனால் செலவினத் தேவை எழுந்த ஏனைய தேவையான விடயங்களுக்கு மிகை நிதியெற்பாடு மாற்றுதலும் இடம்பெற்றிருந்தது. | |

### 3.2 செயல்முன்னேற்றம் சமர்ப்பிக்கப்படாமை

---

நிதி அமைச்சின் 2021 ஆம் ஆண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குரிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

(i) திறைசேரியின் கீழ் உள்ள திணைக்களங்களின் சகல நிதி செயற்பாடுகளையும் உறுதிப்படுத்தல்.

(ii) வியாபாரம் சார்ந்த செயற்பாடுகளுக்கான வசதிகளை வழங்குதல் மற்றும் நல்லாளுகையை விருத்தி செய்தல்.

(iii) அரச முதலீட்டுக்கான வசதியை வழங்குதல், சொத்துக்கள் முகாமைத்துவம் மற்றும் மனிதவள முகாமைத்துவத்தை உச்ச அளவில் பயன்படுத்துவதை உறுதிப்படுத்தல்.

(iv) பதவியணியினருக்காக பயிற்சிபெற்ற மனிதவள அபிவிருத்தியை உறுதிப்படுத்துதல்

(v) கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகையை உறுதிப்படுத்தல்.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மேலே குறிப்பிடப்பட்ட பணிகளை நிறைவேற்றும் செயல்முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு | உரிய காலஎல்லையில் முறையான நிதி முகாமைத்துவத்தை பேணிச் செல்வதற்கு தொடர்ச்சியாக | மீளாய்வாண்டிற்கு உரியதாக நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் |

| | | |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமை, 2021 ஆம் ஆண்டின் போது கொவிட் 19 வைரஸ் நிலைமையின் காரணமாக பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துதல் மற்றும் பங்குபற்றலை குறைக்க வேண்டியிருந்தமை, வெளிநாட்டு ஒதுக்கம் தொடர்பாக ஏற்பட்டுள்ள நிலைமையின் காரணமாக பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ள இறக்குமதி மற்றும் ஏற்றுமதி துறைகளில் ஈடுபடுகின்ற முயற்சியாளர்களின் கஷ்டத்தை குறைப்பதற்கான வசதிகளை வழங்க வேண்டியிருந்தமை, ITMIS செயற்திட்டம் ஊடாக அரச நிறுவனங்களின் கணக்கு நடவடிக்கைகளை மிகவும் முறையாக மேற்கொள்ள வேண்டியிருந்தமை, அரச சொத்து முகாமைத்துவம், மேற்பார்வை மற்றும் உச்ச அளவில் சொத்துக்களை பயன்படுத்துதல் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டியிருந்தமை மற்றும் அரச வருமானம் சேகரிக்கப்படுகின்ற திணைக்களங்களின் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்பட்டிருந்தது. | மற்றும் அது தொடர்பான செயல் முன்னேற்ற செயலாற்றல் அறிக்கை உள்ளடக்கப்படல் வேண்டும். |

### 3.3 பெறுகைகள்

#### (அ) பெறுகை திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 (அ) மற்றும் (ஆ) வழிகாட்டியின் பிரகாரம் பெறுகை நிறுவனத்தினால் ஆகக்குறைந்தது வருடங்களுக்கு மூன்று (03) வருட காலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை செயற்பாடுகளை உள்ளடக்கி பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அமைச்சினால் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | 2020 மற்றும் 2021 போன்ற ஆண்டுகளில் அமைச்சின் பல்வேறு பிரிவுகளில் ஊழியர்கள் கொவிட் நோய் நிலைமைக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்ததன் காரணமாக அந்த பிரிவுகளை மூடி வைக்க வேண்டியிருந்ததுடன் தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியாமையின் அடிப்படையில் பிரதான பெறுகைத் திட்டத்தை தயாரிப்பதற்கு முடியாதிருந்தது. | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1(இ) வழிகாட்டியின் பிரகாரம் அடுத்துவரும் ஆண்டிற்கான பெறுகை செயற்பாடுகளை விரிவாக தயாரித்து பெற வேண்டியிருந்த போதிலும் அமைச்சினால் 2021 ஆம் ஆண்டிற்குரிய விரிவான பெறுகைத் திட்டம், அந்த ஆண்டின் இறுதியின் பின்னர் 2022 சனவரி 19 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் விரிவான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்துரைத்த காலப்பகுதியில் பெறுகைத் திட்டம் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

#### (ஆ) திறைசேரி பழைய கட்டிடத்தின் மத்திய வளிப்பதனாக்கி முறைமைக்காக புதிய குளிரூட்டும் இயந்திரம் (Chiller Machine) வழங்கி பொருத்துதல்

பொதுத்திறைசேரியின் பழைய கட்டிடத்தில் மத்திய வளிப்பதனாக்கி முறைமைக்காக புதிய குளிரூட்டும் இயந்திரம் (Chiller Machine) வழங்கி பொருத்துவதற்காக தேசிய போட்டியாளர் பெறுகை திட்டத்தின் கீழ் வழங்கும் ஒப்பந்தகாரராக தனியார் கம்பனியொன்று தெரிவு செய்யப்பட்டு அதற்காக 2020 ஆம் ஆண்டிலும் 2021 ஆம் ஆண்டின் போதும்

கூட்டுமொத்தமாக ரூபா 25,464,689 (வரியுடன்) உரிய ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 ஆகஸ்ட் 23 ஆந் திகதி முதல் தடவையாக கூடிய பெறுகைகள் குழுவில் இந்த பெறுகைகளுக்கான ஆலோசனைச் சேவை, இலங்கை மின்சார சபையிலிருந்து நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கிரய மதிப்பீடு தயாரித்தல் மற்றும் கேள்வி ஆவணங்களை தயாரிக்கும் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக இலங்கை மின்சார சபையினால் ரூபா 897,000 மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கிரய மதிப்பீடு தயாரிக்கும் போது இயலுமானவரை சரியாக தயாரிப்பதை கண்காணித்துக் கொள்ள வேண்டியிருந்த போதிலும் ஆலோசனைச் சேவை நிறுவனமாக தெரிவு செய்யப்பட்ட இலங்கை மின்சார சபையினால் அந்த பெறுகையின் கிரய மதிப்பீடாக கூட்டுமொத்தமாக ரூபா 34,000,000 (வரியின்றி) சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அது பெறுகை குழுவினாலும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உரிய ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட விலையான ரூபா 23,666,049 (வரியின்றி) உடன் ஒப்பிடும் போது கிரய மதிப்பீடு ரூபா 10,333,951 இனால் அதாவது 30 சதவீதத்தினால் | மதிப்பீட்டு விலையினை விட தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரின் விலையில் குறைவொன்று ஏற்பட்டுள்ளது. | இயலுமானவரை சரியாக மதிப்பீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அதிகரித்திருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2019 ஆகஸ்ட் 23 ஆந் திகதி இந்த பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2020 யூலை 10 ஆந் திகதி கூடிய பெறுகை குழுவினால் இந்த வழங்கல் ஒப்பந்தத்திற்காக UL (Registered by Underwriters Laboratories) சான்றிதழ் அத்தியவசியமாக இருந்தமை குறிப்பிடப்பட்டு தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கு அந்த சான்றிதழ் காணப்படாமையினால் மீண்டும் பெறுகை மேற்கொள்ள வேண்டியிருந்தமை தீர்மானிக்கப்பட்டிருந்தது. பின்னர் இந்த சான்றிதழ் அவசியமற்றது என பெறுகைகள் குழு தீர்மானத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மேலதிக குறிப்பு (Addendum I) மூலம் காண்பிக்கப்பட்டு மீண்டும் திறக்கப்பட்ட கூறுவிலையின் கீழ் கேள்வி கோரி மேற்கூறப்பட்ட வழங்கல் ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். பெறுகைகள் தீர்மானம் எடுக்கும் போது இயலுமானவரை சரியாகவும் தாமதமின்றியும் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளாமையால் இந்த பெறுகைகள் தொடர்பாக முதலாவதாக பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தலுக்காக செலவிடப்பட்ட ரூபா 198,045 தொகை சிக்கனமற்ற செலவினமாக இருந்தது. | 2020.07.30 ஆந் திகதி நடைபெற்ற ஆரம்ப கேள்வி கலந்துரையாடலுக்காக 2020.07.31 ஆந் திகதி பெறுகைகள் தீர்மானத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மேலதிக குறிப்பு (Addendum I) இன் பிரகாரம் கேள்வி பதிவேட்டின் பக்க இலக்கம் 25 இல் UL சான்றிதழ் தொடர்பான பிரிவு 6.1(i) அவசியமற்றதாக குறிப்பிடப்பட்டிருந்தது. முதலாவது பெறுகையின் போது அந்த UL சான்றிதழ் உள்ள எந்தவொரு கம்பனியும் கேள்வி ஆவணங்கள் சமர்ப்பிக்காதிருந்தமை மற்றும் இரண்டாவது தடவையும் முன்னைய கேள்வி கலந்துரையாடலின் போது கேள்வி சமர்ப்பிப்பதற்கு விருப்பம் தெரிவித்த நபருடன் கலந்துரையாடும் போது இந்த சான்றிதழ் அத்தியவசியமற்றது என அவதானிக்கப்பட்டது. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் சகல கேள்விகளும் சமர்ப்பிக்கப்பட்டமைக்குரிய சமமான சந்தர்ப்பம் வழங்குதல் நோக்காகக் கொண்டு பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்தது. | பெறுகைகள் தீர்மானம் எடுக்கும் போது இயலுமானவரை சரியாகவும் தாமதமின்றியும் மேற்கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2019 ஆகஸ்ட் 23 ஆந் திகதி இந்த பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 2020 செப்தெம்பர் 18 ஆந் திகதி மேற்கூறப்பட்ட ஒப்பந்தகாரருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த பெறுகைகளுக்காக வழங்கும் ஒப்பந்தகாரரை தெரிவு செய்வதற்கு 01 வருடமும் 26 நாட்களுமான காலம் எடுத்திருந்தது. | 2019.08.23 ஆந் திகதி இந்த பெறுகைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் அந்த பெறுகைக்கால அட்டவணையின் பிரகாரம் 2020.01.31 ஆந் திகதி அதனை பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் அலுவலக நடவடிக்கைகள் முடங்கியதன் காரணமாக குறித்துரைத்த காலத்தை விட அதிக காலம் அதாவது 04 மாதங்கள் 16 நாள் காலம் தொழில்நுட்ப மதிப்பீட்டிற்கு எடுத்தமையால் கேள்வி செல்லுபடி காலத்தை நீடிப்பதற்கு வேண்டியேற்பட்டிருந்தது. | பெறுகைகளுக்கான கால அட்டவணையை தயாரித்து அதன் பிரகாரம் தாமதமின்றி பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**(இ) பாராளுமன்ற அலுவல்கள் பிரிவிற்காக நிழற்பட இயந்திரமொன்றை கொள்வனவு செய்தல்**

நிதி அமைச்சின் பாராளுமன்ற அலுவல்கள் பிரிவிற்காக நிழற்பட இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்வதற்காக வரையறுக்கப்பட்ட கூறுவிலையின் கீழ் தனியார் கம்பனியொன்றினால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 1,539,000 (வரியுடன்) கேள்வி தெரிவு செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டின் போது அந்த ஒப்பந்த பெறுமதியின் அடிப்படையில் ஒப்பந்தகாரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மேற்கூறப்பட்ட இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களில் 2.7 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்த தொகையில் 5 சதவீதமான செயலாற்றல் காப்புறுதி வழங்கும் ஒப்பந்தம் முடிவடைந்து 28 நாட்கள் வரையான காலப் பகுதியை மேவுகை செய்யும் வகையில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் | உரிய நிறுவனத்திற்கு கையளிக்கும் போது செயலாற்றல் பிணை முறி பெறப்படாதிருந்ததுடன் எதிர்காலத்தில் அவ்வாறின்றி செயற்படுவதற்கு கண்காணித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயலாற்றல் காப்புறுதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கல் ஒப்பந்தம் தொடர்பாக அந்த செயலாற்றல் காப்புறுதி வழங்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கு 2021 மே 20 ஆந் திகதி கொள்வனவு கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் வழங்கல் கால பகுதி மற்றும் இயந்திரம் தொடர்பான ஒரு உத்தரவாதக் காலத்தை உள்ளடக்கிய நிபந்தனைகளுடன் ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்கவில்லை | ஒப்பந்த நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி ஆவணத்தில் நிபந்தனைகளுக்காக இரு தரப்பினரதும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் கையளிக்கப்பட்டிருந்தது. | வழங்கும் காலப்பகுதி வரை முழுமையான உடன்படிக்கை தயாரித்து கைச்சாத்திடு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.2 மற்றும் 4.2.3 வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைகள் ஆரம்பிக்கும் சந்தர்ப்பம் முதல் முடிவுறும் வரை ஒவ்வொரு பெறுகை நடவடிக்கைகளின் கட்டங்கள் தொடர்பான விபரங்கள் 02 கட்டங்களின் கீழ் பெறுகை கால அட்டவணை தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. பெறுகைகள் 2021 பெப்ரவரி 18 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 06 மாதங்களும் 24 நாட்களும் ஆன கால தாமதத்தின் பின்னர் உரிய இயந்திரம் 2021 செப்தெம்பர் 14 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. | பெறுகை செயற்பாடு களுக்குரிய கால அட்டவணை தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தின் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகை கால அட்டவணை தயாரித்து அதன் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (iv) | பெறுகைகளின் கீழ் 2021 செப்தெம்பர் 14 ஆந் திகதி அமைச்சிற்கு கிடைத்த நிழற்படபிரதி இயந்திரத்திற்காக உரிய வழங்கும் நிறுவனத்திற்கு பணம் செலுத்துவதற்கு முன்னர் உரிய மாதிரிகளுக்கு இணங்கியுள்ளதா என்பது தொடர்பாக தொழில்நுட்ப | தொழில்நுட்ப உத்தியோகத்தரின் பரிசோதனைக்கு அனுப்பப்படாதிருந்தமை மற்றும் எதிர்காலத்தில் இந்த வழுக்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வழங்கப்பட்டுள்ள பொருட்கள் குறித்துரைத்த மாதிரிகளுக்கு இணங்கியிருந்ததா என்பது தொடர்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தரின் பரிசோதனைக்கு உட்படுத்தி உறுதிப்படுத்திக் |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தல் பெறப்பட்டிருக்கவில்லை. | | கொள்ளல் வேண்டும். |
| (v) | வழங்கும் நிறுவனத்திற்குரிய கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட நிபந்தனையின் கீழ் குறித்துரைத்த திகதியில் உள்ளவாறு உரிய வழங்கல்களை மேற்கொள்வதற்கு ஒப்பந்தகாரர் தவறுவாராயின் தாமதமான ஒவ்வொரு நாட்களுக்காகவும் ஒப்பந்த தொகையில் 0.05 சதவீதத்திற்கு சமமான தொகை கழிக்க வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. இந்த வழங்கல் ஒப்பந்தத்திற்கு உரிய கட்டளை 2021 மே 21 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டு 06 மாதங்களும் 24 நாட்கள் காலத்தின் பின்னர் வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இந்த வழங்கும் ஒப்பந்தம் தொடர்பாக வழங்கப்பட்ட காலப்பகுதி வரை உடன்படிக்கை செய்யாதிருந்தமையால் மேற்கூறப்பட்ட நிபந்தனையின் பிரகாரம் தாமத நட்டத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | வழங்கும் கால பகுதி வரை முழுமையாக உடன்படிக்கை தயாரித்து உடன்படிக்கை கைச்சாத்திடு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் உரிய பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**(ஈ) தாபன பிரிவு மற்றும் கணக்கு பிரிவுகளுக்காக 02 நிழற்பட இயந்திரங்களை கொள்வனவு செய்தல்**

---

நிதி அமைச்சின் தாபன பிரிவு மற்றும் கணக்குகள் பிரிவிற்காக 02 நிழற்பட இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக வரையறுக்கப்பட்ட கூறுவிலையின் கீழ் தனியார் நிறுவனமொன்றினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு இயந்திரத்தின் விலை ரூபா 475,000 (வரியுடன்) ஆக 02 இயந்திரங்களுக்காக 950,000 கேள்வி தெரிவு செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டின் போது அந்த தொகை மேற்கூறப்பட்ட வழங்கல் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | இந்த நிழற்பட இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு உரிய பெறுகை நடவடிக்கைகள் 2021 மார்ச் 22 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு அமைச்சிற்கு 05 மாதங்கள் 12 நாள் தாமதத்துடன் 2021 செப்தெம்பர் 03 ஆந் திகதி உரிய இயந்திரம் பெறப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த பெறுகைகளை நிறைவேற்றும் போது அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகை கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | கால அட்டவணை தயாரிப்பதற்கு முடியாதிருந்தமை மற்றும் உரிய பொருட்கள் அமைச்சிற்கு வழங்குவதற்காக மேலதிக காலம் எடுத்தமை. | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகை கால அட்டவணை தயாரித்து அதன் பிரகாரம் பெறுகைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | இந்த வழங்கல் ஒப்பந்தத்திற்குரிய கேள்வி ஆவணங்களில் குறிப்பிட்ட நிபந்தனையின் கீழ் குறித்துரைத்த திகதியில் உரிய வழங்கல்களை மேற்கொள்வதற்கு ஒப்பந்தகாரர் தவறுவாராயின் தாமதமாகின்ற ஒவ்வொரு நாட்களுக்காகவும் ஒப்பந்த தொகையில் 0.05 சதவீதத்திற்கு சமமான தொகை கழிக்கப்பட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த வழங்கல் ஒப்பந்தத்திற்குரிய கட்டளை 2021 யூன் 01 ஆந் திகதி மேற்கொண்டு 03 மாதங்களும் 02 நாட்களின் பின்னர் 2021 செப்தெம்பர் 03 ஆந் திகதி வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த வழங்கல் ஒப்பந்தம் தொடர்பாக வழங்கல் காலப்பகுதியில் மற்றும் உரிய நிபந்தனைகளில் | தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | வழங்கும் காலப்பகுதி வரை முழுமையாக உடன்படிககை தயாரித்து கைச்சாத்திடு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த துடன் உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காண்பிக்கப்பட்ட உடன்படிக்கை செய்யப்படாதிருந்தமையால் மேற்கூறப்பட்ட நிபந்தனையின் பிரகாரம் தாமத நட்டத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | | |
| (iii) | இந்த பெறுகைகளின் கீழ் 2021 செப்தெம்பர் 03 ஆந் திகதி அமைச்சிற்கு கிடைத்த 02 நிழற்பட இயந்திரங்களுக்காக உரிய வழங்கல் ஒப்பந்தகாரருக்கு பணம் செலுத்துவதற்கு முன்னர் உரிய மாதிரிகளுக்கு இணங்கியிருந்ததா என்பது தொடர்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தல் பெறப்பட்டிருக்கவில்லை. | தொழில்நுட்ப உத்தியோகத்தரின் பரிசோதனைக்கு அனுப்பப்படாதிருந்ததுடன் எதிர்காலத்தில் இந்த வழுக்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வழங்கப்பட்ட பொருட்கள் குறித்துரைத்த மாதிரிக்கு இணங்கியிருந்ததா என தொழில்நுட்ப உத்தியோகத்தரின் பரிசோதனைக்கு உட்படுத்தி உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---------------------------------------------------

**வாகன முகாமைத்துவம்**

----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சுக்குச் சொந்தமான 28 வாகனங்கள் இராஜாங்க அமைச்சு அலுவலகம், திணைக்களங்கள், கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அவை முறையான பிரகாரம் கையளிக்கப்பட்டிருக்க வில்லை. | தற்காலிக அடிப்படையில் ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. | முறையான பிரகாரம் கையளிப்பதற்கோ அல்லது மீண்டும் அமைச்சிற்கு பெற்றுக் கொள்வதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஏனைய நிறுவனங்களிலிருந்து அமைச்சுக்கு முறையாக கையளிக்கப்படாமல் வாகனமொன்று பெறப்பட்டிருந்தது. | நிதி அமைச்சிற்கு ஒரு வாகனம் கையளிக்கப்பட்டிருக்க வில்லை. | முறையான பிரகாரம் கையேற்பதற்கோ அல்லது மீண்டும் அந்த நிறுவனத்திற்கு வழங்குவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டு முதல் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வரி முறையீட்டு ஆணைக்குழுவிற்கு 1024 முறையீடுகள் கிடைத்திருந்ததுடன் அவற்றுக்கிடையே சர்ச்சைக்குரிய வரித் தொகை ரூபா 113,154,326,286 தொகையான 569 முறையீடுகள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. விசாரணைகள் ஆரம்பிக்கப்படாத 569 முறைப்பாடுகளில் 227 (40 சதவீதம்) முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்ட திகதி முதல் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்படாமல் 02 வருடங்களை (721 நாட்கள்) விஞ்சிக் காணப்பட்டது. அதற்குரிய சர்ச்சைக்குரிய வரித் தொகையின் பெறுமதியின் கூட்டுமொத்தம் ரூபா 47,726,623,490 ஆகும். | புதிதாக பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகளில் வழக்கு விசாரணைகள் ஆரம்பிக்க முடியுமாக இருப்பது அது வரையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வழக்கு விசாரணைகள் முடிவடைந்த அளவு மாத்திரம் ஆகும். எனினும் 2022 ஆகஸ்ட் மாதம் அளவில் 2019 இன் முதல் அரைப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகளில் வழக்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | வரி முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2011 இன் 23 ஆம் இலக்க வரி முறையீட்டு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்கு கிடைத்துள்ள சகல முறைப்பாடுகளுக்காகவும் அதற்குரிய தீர்வு, உரிய வரி முறைப்பாடுகள் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு 270 நாட்களுக்குள் வழங்க வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டு முதல் | 2011 இன் 23 ஆம் இலக்க வரி முறையீட்டு ஆணைக்குழு திருத்த சட்டத்தின் 10 ஆவது பிரிவு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அருத்த வெளிப்பாட்டின் பிரகாரம் செயற்பாட்டு (Directory) (Mandatory) பிரிவு அல்ல. CA(TAX)17/2013, CA(TAX)09/2017 மற்றும் CA/(TAX)/2017 என்ற வழக்கு தீர்வுகளின் போது | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வரி முறைப்பாடுகளை விசாரணை செய்து தீர்வினை வழங்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2021 ஆம் ஆண்டு வரை பதிவு செய்து 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விசாரணையில் காணப்படுகின்ற வரி முறைப்பாடுகளில் 58 சதவீதம் அதாவது 134 விசாரணைகளுக்குரிய சர்ச்சைக்குரிய வரித்தொகை ரூபா 21,753,083,864 ஆக காணப்பட்டதுடன் அந்த முறைப்பாடுகள் கிடைத்து 288 நாட்கள் முதல் 1515 நாட்கள் வரையான காலப்பகுதியை கடந்திருந்த போதும், 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்வு வழங்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வழக்கை விசாரணை பிரயோக செயற்பாடுகள் மிகவும் சிக்கலானதாக இருந்ததுடன் உரிய தரப்பினருக்கு தேவையான காலம் வழங்குவதற்கு ஏற்பட்டிருந்தது. சுயாதீன அடிப்படை கொள்கைகளின் பிரகாரம் இரு தரப்பினரும் சந்தித்தல் வேண்டும். அதற்காக அநேக வழக்குகளுக்கு கூடுதலான காலம் எடுத்திருந்தது. அந்த நிலைமையில் 220 நாட்களில் வழக்கு விசாரணைகள் பூர்த்தி செய்வதற்கு பிரயோக ரீதியில் முடியாதிருந்தது. | |
| (இ) | ஆணைக்குழுவின் உட்கட்டமைப்பு தொடர்பான பரிசோதனையின் போது 2011 இன் 23 ஆம் இலக்க வரி முறையீட்டு சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஒன்பது பேர்களுக்கு மேற்படாத அங்கத்தவர்களுக்கு இடையே மூன்று ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் இருக்க வேண்டியிருந்தது. மிகுதி அங்கத்தவர்கள் ஆறு பேர் வரியிடல், நிதி மற்றும் சட்டம் தொடர்பான விரிவான அறிவுடன் உரிய துறைகளில் சிறந்த தேர்ச்சியுள்ள அங்கத்தவர்களாக இருத்தல் வேண்டும். தற்போது காணப்படுகின்ற உட்கட்டமைப்பு தொடர்பாக பரீட்சிக்கும் போது அங்கத்தவர்கள் ஒன்பது பேரில் அங்கத்தவர்கள் ஐந்து பேரும் ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி இல்லது மேன்முறையீட்டு நீதிபதிகளாக இருந்தனர். | சரியானதாகும். | வரி முறையீட்டு ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம் ஆணைக்குழுவின் உட்கட்டமைப்பு தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2011 இன் 23 ஆம் இலக்க வரி முறையீட்டு சட்டத்தின் 8(3) பிரிவின் மூலம் வரி முறைப்பாடுகள் தொடர்பான கட்டணங்களுக்கு சட்டத்தின் மூலம் தீர்வு எடுக்க வேண்டியிருந்த போதிலும் வரி முறைப்பாடுகள் சமர்ப்பிக்கும் போது அறவிடப்படும் கட்டணம் ரூபா 2,500 ஆக 2012 ஆம் ஆண்டு முதல் நிலையானதாக காணப்பட்டது. | சரியானதாகும். | வரி முறையீட்டு சட்டத்தின் பிரகாரம் வரி முறைப்பாட்டு கட்டணத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2011 இன் 23 ஆம் இலக்க வரி முறையீட்டு சட்டத்தின் 11 ஆவது பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் (சட்டத்தின் 9(10) ஆம் பிரிவு) பிரகாரம் முறைப்பாடு செய்யப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட குறைந்த அல்லது இரத்துச் செய்யப்படாத சந்தர்ப்பங்களின் போது கிரயத்தை தீர்த்துக் கொள்வதற்காக ஆகக்கூடிய ரூபா 5,000 இன் கீழ் செலுத்துமாறு முறைப்பாட்டாளருக்கு கட்டளை இடமுடியுமாக இருந்தது. தெரிவு செய்யப்பட்ட தெரிவில் 2016 ஆம் ஆண்டு முதல் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை காணப்பட்ட மதிப்பீட்டு குறைவு அல்லது இரத்துச் செய்யப்படாத முறைப்பாடுகள் தொடர்பாக அதற்குரிய கிரயத்தை மேவுகை செய்து கொள்வதற்கு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எந்தவொரு அறவீடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இது தொடர்பான தீர்மானம் ஆணைக்குழு அங்கத்தவர்களினால் எடுக்கப்பட்டதுடன், ஆணைக்குழுவின் கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வரி முறையீட்டு ஆணைக்குழு சட்டத்தின் ஏற்பாடுகின் பிரகாரம் கிரயத்தை மேவுகை செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மேற்கூறப்பட்ட சட்டத்தின் 4(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வரி முறைப்பாடு விசாரணையின் போது ஆணைக்குழுவினால் பெயரிடப்பட்ட சட்ட ஆலோசனை குழுவின் அங்கத்தவர்கள் இருவர் பங்குபற்ற வேண்டியிருந்தது. வரி முறையீட்டு ஆணைக்குழுவின் செயலாளரால் நிதி அமைச்சுக்கு விநியோகிக்கப்பட்ட 2021 நவம்பர் 30 ஆந் திகதிய TAC/ADMIN/CMA/03/2018 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் 07 சட்ட ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டிருந்ததாக காண்பிக்கப்பட்ட போதிலும் பரிசோதனை செய்யப்பட்ட தெரிவிக்குரிய வரி முறைப்பாடுகளை விசாரணை செய்யும் போது ஆலோசனைக் குழுவின் ஒரு அங்கத்தவரின் பங்குபற்றலுடன் முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டிருந்தது. | சரியானதாகும். | வரி முறையீட்டு ஆணைக்குழு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் போது அங்கத்தவர்களின் பங்குபற்றலுடன் விசாரணைகள் செய்யப்படல் வேண்டும். |
| (எ) | 2011 இன் 23 ஆம் இலக்க வரி முறையீட்டு ஆணைக்குழு சட்டத்தின் 7 ஆவது பிரிவின் 1(அ) பிரிவின் பிரகாரம் முறைப்பாட்டாளரால் ஆணைக்குழுவின் முறைப்பாடு தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படும் வரை செல்லுபடியாக காணப்படுகின்ற, சர்ச்சைக்குரியதாகவுள்ள தொகையில் நூற்றுக்கு இருபத்தைந்து சதவீதத்திற்கு சமமான பணம் அளவில் வங்கி பிணையொன்று வைக்கப்பட வேண்டும். ஏககாலத்தில் தெரிவு செய்யப்பட்ட 26 முறைப்பாட்டு | வரி கோவைகளுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களால் தமது பொறுப்பில் காணப்படுகின்ற தரவு முறைமையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் வங்கிப் பிணையினை நாளதுவரையாக்குவதற்காக கடிதம் விநியோகிக்கப்படுகின்றது. வரி கோவைகளின் வங்கி பிணைகளை நாளதுவரையாக்குவதற்கான கடிதம் விநியோகிக்கப்பட்ட போதும் முறைப்பாட்டாளர் வங்கி பிணையினை முறையாக நாளதுவரையாக்கவில்லை. | வரி முறையீட்டு ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம் வங்கி பிணைகளை நாதுவரையாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கோவைகளில் மேற்கூறப்பட்ட பிரிவுகளின் ஏற்பாடுகளில் உள்ள இணக்கப்பாடுகளை பரிசோதனை செய்த போது காலாவதியாகியிருந்த வங்கி பிணைகளுடன் 17 முறைப்பாட்டு கோவைகள் அளவு காணப்பட்டது. | | |
| (ஏ) | தெரிவு செய்யப்பட்ட தெரிவில் 2016 ஆம் ஆண்டு முதல் 2021 திசெம்பர் 31 வரை தீர்வு வழங்கப்பட்ட 323 முறைப்பாடுகள் தொடர்பாக பரிசோதனை செய்த போது ஒரு வரி முறைப்பாட்டாளருக்கு தீர்வு வழங்குவதற்கு முறைப்பாடுகள் பதிவு செய்த திகதி முதல் சராசரியாக 1050 நாட்கள் ஆன காலம் எடுத்திருந்தது. மேலும் தெரிவு செய்யப்பட்ட தெரிவின் போது 323 வரி முறைப்பாட்டாளர்களில் 80 சதவீதத்திற்கு தீர்வு வழங்குவதற்கு 02 வருடங்களுக்கு (720 நாட்கள்) மேற்பட்ட காலம் எடுத்திருந்தது. | ஆணைக்குழு அங்கத்தவர்களின் நியமனம் தொடர்பாக ஏற்பட்ட தாமதம், கடமைகளை கையேற்காமை மற்றும் விலகிச் சென்றமை, நிரந்தர அலுவலக சூழலொன்று காணப்படாமை, குழு அங்கத்தவர்கள் அவ்வவ்போது சுகவீனம் அடைந்தமை, விடைகளை காண்பிப்பதற்கான தரப்பினர் தொடர்ச்சியாக காலம் எடுத்தமை, சில சந்தர்ப்பங்களில் தரப்பினர்கள் வருகை தராமல் காலம் கோரியிருந்தமை, Covid-19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக நாடு அவ்வவ்போது மூட வேண்டியிருந்தமை போன்ற காரணங்களால் நீண்ட காலம் முழுவதும் ஆணைக்குழு 3 குழுக்களின் கீழ் நடாத்திச் செல்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்காமை காரணமாக வரி முறைப்பாடுகள் விசாரணை செய்தல் தாமதமடைந்திருந்தது, 2022.07.08 ஆந் திகதி, தலைவரை உள்ளடக்கிய 5 அங்கத்தவர்களின் பதவிக்காலம் முடிவடைந்து 03 குழுக்களும் செயற்பாடற்று காணப்பட்டது. | வரி முறைப்பாட்டுக்காக தீர்வினை வழங்குதல் விரைவாக மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | கவனத்தில் கொள்ளப்பட்ட வருடமான 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டின் போது முறையே 344 ஆணைக்குழு கூட்ட தடவைகள் மற்றும் 98 | ஏற்றுக்கொள்கின்றோம். | வரி முறைப்பாட்டு குழு கூட்டங்களை தொடர்ச்சியாக நடாத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடாத்தப்பட்டிருந்தது. இதன் போது 03 வரி முறைப்பாட்டு குழுக்களின் உள்ளடக்கிய காலப்பகுதியில் 04 மாதங்கள் வீதம் வரி முறைப்பாடு ஆணைக்குழு செயற்படாது இருந்ததுடன் 03 குழுக்களை கவனத்தில் கொள்ளும் போது ஒரு குழுவின் கூட்டம் வருடாந்தம் சராசரியாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது முறையே 114, 33 ஆக காணப்பட்டது. | | |
| (ஒ) | வரி முறையீட்டு ஆணைக்குழு சட்டத்தின் 7(1)(அ) பிரிவின் பிரகாரம் சட்டத்தின் பட்டோலை I மற்றும் பட்டோலை II இன் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட பிரிவுகள் மற்றும் சட்டத்தின் மூலம் சர்ச்சைக்குரியதான வரி அல்லது தண்டப்பணம் தொடர்பாக ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்வதற்கான உரித்து காணப்பட்டது. 2018 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் அமுல்படுகின்ற வரி சட்டமான 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் அதற்குரிய சட்டத்தின் பிரிவுகள் இந்த பட்டோலைகளில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | சரியானதாகும். | உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரகாரம் வரி முறையீட்டு ஆணைக்குழு சட்டத்தை திருத்துதல் வேண்டும். |
| ஓ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 140 ஆம் பிரிவின் பிரகாரம் நிர்வாக மீளாய்வொன்றை செய்வதற்கு கோரி 90 நாட்களை விஞ்சியிருந்த போதிலும் வரி முறையீட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகளை செய்யும் உரித்தை கொண்டிருந்த போதும் அந்த | சரியானதாகும். | - மேற்படி - |

விடயங்களை அடிப்படையாகக் கொண்டு வரி முறைப்பாட்டு சட்டத்தின் 7(1) பிரிவு திருத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அமைச்சின் ஒட்டுமொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 63 ஆக காணப்பட்டது. அதில் சிரேஷ்ட நிலையில் 18 வெற்றிடங்கள் காணப்பட்டது. | தற்போது கலைக்கப்பட்டுள்ள பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்டமிடல்களை அமுல்படுத்தும் திட்ட அமுலாக்கல் அமைச்சில் சேவையாற்றுகின்ற நிறைவேற்று பதவிநிலை உத்தியோகத்தர்களும் இந்த அமைச்சில் காணப்படுகின்ற வெற்றிடங்களுக்காக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மிகுதி வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்களை நியமித்துக் கொள்ளும் வரை கடமை மேவுகை அடிப்படையில் உத்தியோகத்தர்களுக்கு கடமைகள் கையளிக்கப்பட்டுள்ளமை, அமைச்சின் செயலாற்றலுக்கு பாதகமாக ஏற்படுத்தியிருக்கவில்லை. | செயலாற்றலுக்கு பாதகமாக தாக்கம் ஏற்படுத்துமாயின் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது அவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தாதிருக்கு மாயின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை திருத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதியமைச்சின் சம்பளம் செலுத்துகின்ற ஏனைய நிறுவனங்களின் சேவைகளுக்காக விடுவிக்கப்பட்ட 10 உத்தியோகத்தர்களுக்காக 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 4,303,272 செலுத்தப்பட்டிருந்தது. | சேவைத் தேவையின் பிரகாரம் சில நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் அந்த நிறுவனங்களுக்காக தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் களுக்கிடையே பிரதமர் அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்ட 07 உத்தியோகத்தர்கள் தற்போது இந்த அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டுள்ளனர். | சேவையாற்றுகின்ற நிறுவனங்களின் சம்பளம் மற்றும் படிகளை பெற்றுக் கொள்வதற்கு முடியுமான வகையில் முறையானதாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |